(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 2(5).]**

# பாராளுமன்றத்தின்
# 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

**2025 ஜூன் 20, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது**

---

## 2025 ஜூலை 08, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நாணய மாற்றுண்டியல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

சமுர்த்தி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 மே 19 ஆம் திகதிய 2437/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2025.06.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

## 2025 ஜுலை 11, வெள்ளிக்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 55/2025

கௌரவ உபுல் கித்சிறி,— இரத்தினபுரி மாவட்டத்தில் கொலொன்ன பிரதேச செயலகத்திற்குரிய மடுவன்வெல பிரபுமனை (வலவ்வ) முதற்கொண்டு இலங்கையில் புராதன பெறுமதி வாய்ந்த தலங்களைப் பாதுகாத்தல்,— இரத்தினபுரி மாவட்டத்தில் கொலொன்ன பிரதேச செயலகத்திற்குரிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமான மடுவன்வெல பிரபுமனை முதற்கொண்டு இலங்கையில் பெரும் எண்ணிக்கையிலான புராதன பெறுமதி வாய்ந்த தலங்கள் காணப்படுவதாலும், இத்தலங்கள் சுற்றுலா ஈர்ப்பைக் கொண்டுள்ளதாலும், தற்போது இவை கடுமையாக பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுவதாலும், இவற்றின் மரபார்ந்த தொன்மைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் பேணிப் பாதுகாத்து அத்தகைய தலங்களுக்குச் சொந்தமான காணிகளை துரிதமாக அளவை செய்தும் நிர்ணயம் செய்தும் எதிர்கால சந்ததியினருக்காகப் பாதுகாத்து சுற்றுலாக் கைத்தொழிலுக்காகப் பயன்படுத்த அவற்றைப் பாதுகாக்கும் வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 56/2025

கௌரவ உபுல் கித்சிறி,— உடவளவை பிரதேசத்தை சுற்றுலா வலயமாக பிரகடனப்படுத்தல்,— உடவளவை தேசியப் பூங்கா, உடவளவை யானைகள் சரணாலயம், சங்கபால ரஜமகா விகாரை, உடவளவை நீர்த்தேக்கம், செவனகல சீனித் தொழிற்சாலை, செவனகல கரும்பு ஆராய்ச்சி நிலையம், உடவளவை நன்னீர் மீன்பிடி நிலையம் மற்றும் வவுல்பன சுண்ணாம்புக்கல் குகை முதலிய சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக்கூடிய இடங்கள் காணப்பட்ட போதிலும், முறையான ஒரு வேலைத்திட்டம் இன்மையாலும் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு அவற்றின் பெறுமதியைக் கண்டுகளிக்க முடியாதிருப்பதாலும் இரத்தினபுரி மாவட்டத்தின் உடவளவை மற்றும் மொனராகலை மாவட்டத்தின் செவனகல ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதாக உடவளவை பிரதேசத்தை சுற்றுலா வலயமாக பிரகடனப்படுத்துவதற்கு அரசாங்கம் பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.57/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— “இலங்கைப் பைத்துல்மால் நிதியம்” என்ற பெயரில் நிதியமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம் மக்களின் கல்வி, கலாசாரம், தொழில் மற்றும் இனங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் மற்றும் அன்றாட வாழ்வாதாரத்தைப் பூர்த்திசெய்யத் தேவையான ஒரு நிதியம் தற்சமயம் முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் இல்லாமையினாலும், இவ்வாறான தேவைகளுக்காக “பைத்துல்மால்” என்ற பெயரிலான நிதியம் உலகிலுள்ள முஸ்லிம் நாடுகள் மற்றும் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்கின்ற நாடுகளில் பல ஆண்டுகாலமாக இயங்கிவருவதாலும், இலங்கையில் இவ்வாறானதொரு நிதியம் ஆரம்பிக்கப்படுமானால் அதற்குத் தேவையான நிதியை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வசிப்பவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியுமென்பதாலும், முஸ்லிம் சமய, கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் “இலங்கைப் பைத்துல்மால் நிதியம்” என்ற பெயரில் நிதியமொன்றைத் தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 58/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ,— பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்தி, தொழில் அபிவிருத்தி மற்றும் தனிநபர் சமூக அபிவிருத்தியின் பொருட்டு ஒவ்வொரு பாடசாலைக்கும் பயிற்றப்பட்ட உளவள ஆலோசகர் (Student Counsellor) ஒருவரை நியமித்தல்,— தற்போது பெரும்பாலான பாடசாலை மாணவர்கள் மத்தியில் பல்வேறு உளவியல் சார்ந்த பின்னடைவுகள் காணப்படுவதனாலும், இந்த நிலைமைகள் அவர்களின் உடல் மற்றும் சமூக இருப்பில் மறைமுகத் தாக்கத்தை ஏற்படுத்துவதனாலும், சில சந்தர்ப்பங்களில் பாடசாலைகளுக்கென பாடசாலை உளவள ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ள போதிலும், மேற்படி பதவியில் பாடசாலை ஆசிரியர்களின் வகிபாகமும் உள்ளடங்குவதன் காரணமாக இதன் ஊடாக எதிர்பார்க்கப் படுகின்ற சேவைகள் பயனுறுதிமிக்கவாறு கிடைக்கப்பெறாமையினாலும், சகல பாடசாலை களிலும் உளவள ஆலோசகர் ஒருவரின் அவசியத்தன்மை எழுந்துள்ளதனாலும், பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்தி, தொழில் அபிவிருத்தி மற்றும் தனிநபர் சமூக அபிவிருத்தியின் பொருட்டு ஒவ்வொரு பாடசாலைக்கும் பயிற்றப்பட்ட உளவள ஆலோசகர் ஒருவரை நியமனஞ் செய்யத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 59/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— “ரட்டவிருவன்” (புலம்பெயர் வீரர்கள்) என்றழைக்கப்படும் இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டமொன்றை வகுத்தல்,— இலங்கையின் தேசியப் பொருளாதாரத்தை உயிரூட்டுவதற்காக புலம்பெயர் தொழிலாளர்களால் வழங்கப்படும் பங்களிப்பு மிகவும் விசேடமானது என்பதனாலும், பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வெளிநாடுகளில் பல வருட காலமாக தொழில் செய்த பின்னர் இலங்கைக்கு மீண்டும் வந்து தமது பிள்ளைகளுடன் சேர்ந்து வாழ்கின்றபோது ஒரு சில சந்தர்ப்பங்களில் மீண்டும் அவர்களுக்கு தொழில் புரிவதற்கான ஆற்றல் இல்லாததன் காரணமாக பல்வேறு சிக்கல்களுக்கு முகங் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுவதனாலும், அரசாங்கம் அவர்களிடமிருந்து அந்நியச் செலாவணியாக கிடைக்கப் பெறுகின்ற நிதியிலிருந்து குறித்ததொரு சதவீதத்தைப் பயன்படுத்தி ஓய்வூதிய நிதியமொன்றைத் தாபித்து, ஓய்வூதியத் திட்டமொன்றை வகுக்க வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

---

## 2025 ஜூலை 22, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

162/2024

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— வலு சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2023.09.21 தொடக்கம் 2024.09.20 வரையில் பெற்றோலிய விற்பனையின் மூலம் அரசாங்கம் ஈட்டிய வரி வருமானம் எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியினுள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஈட்டிய இலாபம்/நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி காலப்பகுதியினுள் எரிபொருள் விற்பனையில் மோசடிகள் இடம் பெற்றுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், ஒரு லீற்றர் எரிபொருளில் இருந்து மோசடி செய்யப்பட்ட தொகை, ஒவ்வொரு எரிபொருள் வகையின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(v) மோசடி செய்யப்பட்ட மொத்த பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(vi) ஒவ்வொரு லீற்றர் எரிபொருளிலும் இருந்து மோசடி செய்யப்பட்ட தொகை குறைக்கப்பட்டதன் பின்னர் குறைவடையும் விலையின் ஊடாக கிடைக்க வேண்டிய நிவாரணம் தற்பொழுது நுகர்வோருக்கு வழங்கப்படுகிறதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

183/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக ஆளுகைப் பிரதேசத்தில் அரச மருந்தகமொன்று இல்லை என்பதையும்;

(ii) இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு தெரிவிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அரச மருந்தகமொன்றைத் தாபிப்பதற்கு போதுமான இட வசதிகளுடன் கூடிய கட்டிடமொன்று இல்லை என அறிவிக்கப்பட்டது என்பதையும்;

(iii) ஆயினும், அரச மருந்தகமொன்றை தாபிப்பதற்கென்றே களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலை வளவில் நிர்மாணிக்கப் பட்டுள்ள கட்டிடத்தில் அரச மருந்தகமொன்றை தாபிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

196/2024

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையின் வலுசக்தி துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்திய முதலீட்டுக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை, மேற்படி ஒவ்வொரு முதலீட்டுக் கருத்திட்டத்தின் பெயர், முதலீட்டின் பெறுமதி மற்றும் அதன் மூலம் இலங்கையின் வலுசக்தி துறைக்கு கிடைக்கும் பங்களிப்பு ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) இலங்கையின் வலுசக்தி துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்திய முதலீடுகள் தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

216/2024

கௌரவ ரோஹண பண்டார,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை, ஊழியர் சேமலாப நிதியத்திலுள்ள தொழிற்படும் கணக்குகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வருட அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை;

(ii) மேற்படி காலப்பகுதியினுள் பங்களிப்பாளருக்கு செலுத்தப்பட்ட வருடாந்த வட்டி வீதம் ஒவ்வொரு வருட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு;

(iii) வருடாந்த வட்டி வீதம் தீர்மானிக்கப்படுவதில் கவனம் செலுத்தப்படும் விடயங்கள் யாவை;

(iv) ஊழியர் சேமலாப நிதியத்தை மேலும் வலுப்படுத்துவதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

223/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை முதலீட்டுச் சபையினால் களுத்துறை மாவட்டத்தின் பண்டாரகம, மில்லனிய பிரதேசத்தில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஏற்றுமதி செயலாக்க வலயத்திற்கான காணி சுவீகரிப்பின் முன்னேற்றம் யாது என்பதையும்;

(ii) சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளுக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை யாது என்பதையும்;

(iii) மேற்படி ஏற்றுமதி செயலாக்க வலயத்தில் வீதிக் கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதற்கும் மேற்படி வலயத்திற்கு குழாய் நீரை வழங்குவதற்கும் மற்றும் மின்சாரம் வழங்குவதற்கும் இலங்கை முதலீட்டுச் சபையினால் வெவ்வேறாகச் செலவிடப்பட்ட தொகை யாது என்பதையும்;

(iv) மேற்படி வலயத்தின் வீதிக் கட்டமைப்பு அபிவிருத்தியின் முன்னேற்றம் யாது என்பதையும்;

(v) தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த கருத்திட்டமாகக் கருதி மேற்படி ஏற்றுமதி செயலாக்க வலயத்தில் மீதமாகவுள்ள அபிவிருத்திப் பணிகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

311/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2024.12.31 அன்றுள்ளவாறும் தற்பொழுதும் வெளிநாடுகளில் தொழிலில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களின் எண்ணிக்கையை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2015 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை,

(i) வெளிநாட்டு வேலைவாய்ப்பின் மூலம் பெறப்பட்ட மொத்த வெளிநாட்டுப் பண அனுப்பல்கள் அமெரிக்க டொலர் மற்றும் இலங்கை ரூபாவில் எவ்வளவு என்பதையும்;

(ii) எந்தெந்த நாடுகளிலிருந்து இத்தகைய பண அனுப்பல்கள் மேற்கொள்ளப்பட்டன என்பதையும்;

(iii) வேலை ஒப்பந்தத்தைக் கடைப்பிடிக்கத் தவறியமையினால் வெளியேற்றப்பட்ட புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) இத்தகைய தொழிலாளர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(v) வெளிநாட்டு வேலைகளுக்காக வெளியேறும் இலங்கையர்களுக்கான காப்புறுதித் திட்டத்திலிருந்து ஈட்டிய வருமானம் யாதென்பதையும்;

(vi) இலங்கைப் புலம்பெயர் தொழிலாளர்கள் மீது இத்திட்டத்திலிருந்து செலவிடப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

338/2024

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பண்டைய காலம் முதல் மஹர சிறைச்சாலை வளவில் காணப்பட்ட முஸ்லிம் பள்ளிவாசல் 2019 ஆம் ஆண்டின் பின்னர் இயங்கும் நிலையில் இல்லை என்பதை அறிவாரா;

(ii) அதற்கான காரணங்கள் யாவை;

(iii) மேற்படி பள்ளிவாசலை மீண்டும் பேணிவரத் தேவையான அங்கீகாரம் மற்றும் வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான வாய்ப்பு உள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

443/2025

கௌரவ சாமர சம்பத் தசநாயக்க,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உப பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு அண்மைக் காலத்தில் நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், மேற்படி நேர்முகப் பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) உப பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்க்கப்படும் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) இன்றளவில் மேற்படி பதவிக்கான ஆட்சேர்ப்பு நிறுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) இன்றேல், உப பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்க்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

621/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு விமான சேவைகளை வழங்கும் விமானக் கம்பனிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அத்தகைய கம்பனிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அந்த விமானக் கம்பனிகளால் இன்றளவில் வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (ஸ்ரீலங்கா) கம்பனி மற்றும் இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபைக்குச் செலுத்த வேண்டிய நிலுவைக் கடன் தொகை, மேற்படி விமானக் கம்பனி ஒவ்வொன்றுக்கும் இணங்க வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) அந்த நிலுவைக் கடன் தொகையை அறவிடுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1017/2025

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து,— கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் வருடாந்த சராசரி சீனித் தேவை எவ்வளவென்பதையும்;

(ii) 2023, 2024 ஆண்டுகளிலும் 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து இதுவரையும் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட சீனியின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) 2025 ஆம் ஆண்டு நிறைவில் இலங்கையில் உற்பத்தி செய்வதற்கும் இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கும் எதிர்பார்க்கும் சீனியின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உள்நாட்டில் உற்பத்திச் செய்யப்படும் சீனி மீது விதிக்கப்பட்டுள்ள வரி வகைகள் மற்றும் வரி விகிதங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் பெல்வத்த மற்றும் செவனகல சீனிக் கைத்தொழிற்சாலைகள் சீனி உற்பத்தியில் இன்றளவில் நட்டத்தில் இயங்குவதை அறிவாரா என்பதையும்;

(iii) இலங்கையில் சீனி கைத்தொழில் சார்ந்ததாக உருவாகியுள்ள நேரடி மற்றும் மறைமுக தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி தொழில்கள் இன்றளவில் பாரிய இடர் நிலைக்கு உள்ளாகியுள்ளதை அறிவாரா என்பதையும்;

(v) இலங்கையில் சீனி உற்பத்தியை அதிகரிப்பதற்கும், இறக்குமதி செய்யப்படும் சீனியின் அளவை குறைப்பதற்கும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2025 ஜூலை 23, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

517/2025

கௌரவ ஹர்ஷன ராஜகருணா,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 1000 தேசிய பாடசாலைகளை உருவாக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் இதுவரை தேசிய பாடசாலைகளாக அறிவிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அந்த ஒவ்வொரு தேசிய பாடசாலைக்கும் பெயர் பலகை மற்றும் பிரதான நுழைவாயிலை அமைப்பதற்கு வழங்கப்பட்டுள்ள தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) தற்போது அந்தப் பாடசாலைகள் நிரல் அமைச்சின் மூலம் நிர்வகிக்கப்படுகிறதா இன்றேல், சம்பந்தப்பட்ட மாகாண சபையின் மூலம் நிர்வகிக்கப்படுகிறதா என்பதையும்;

(iv) அதன்படி, இதுவரை உருவாக்கப்பட்டுள்ள தேசிய பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(vi) அந்தத் தேசிய பாடசாலைகளின் பௌதீக வளங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு அவை நிரல் அமைச்சின் கீழ் கொண்டுவரப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

630/2025

கௌரவ ரோஹித அபேகுணவர்தன,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கம் இலங்கைக்கு வாகனங்கள் இறக்குமதி செய்யப்படுவதை நிறுத்திய திகதி யாது என்பதையும்;

(ii) அந்தத் திகதியின் பின்னர் அரச அலுவலர்களுக்காக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) அதற்காக செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாது என்பதையும்;

(iv) அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களில் இதுவரை அரச அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) அந்த வாகனங்கள் வழங்கப்பட்ட ஒவ்வொரு நபரினதும் பெயர், பணியாற்றுகின்ற/ பணியாற்றிய நிறுவனம் மற்றும் பதவி வெவ்வேறாக யாது என்பதையும்;

(vi) இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களில் இதுவரை அரச அலுவலர்களுக்கு வழங்கப்படாதுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(vii) அந்த வாகனங்களை வழங்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

794/2025

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உள்ள நீர்த்தேக்கங்கள், பெரிய அளவிலான குளங்கள் மற்றும் சிறிய அளவிலான குளங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) குருநாகல் மாவட்டத்திலுள்ள மேற்படி குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) அவற்றில், கடந்த பத்து (10) வருடங்களில் சீரமைக்கப்பட்ட எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்திற்கும் ஏற்ப வெவ்வேறாக யாது என்பதையும்;

(iv) அவற்றைச் சீரமைப்பதற்காக செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் 'சார்ப்' என்ற பெயரில் நீர்ப்பாசனத் திட்டமொன்று முன்னெடுக்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) அந்தக் கருத்திட்டத்தின் கீழ் சீரமைக்கப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) 'சார்ப்' கருத்திட்டம் குருநாகல் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டதா என்பதையும்;

(iv) அந்தக் கருத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடுகள் பெற்றுக்கொள்ளப்பட்ட முறை யாது என்பதையும்;

(v) பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்த நிதி ஒதுக்கீடு யாது என்பதையும்;

(vi) அவற்றில் குருநாகல் மாவட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு எவ்வளவு என்பதையும்;

(vii) அந்தக் கருத்திட்டத்தின் கீழ் குளமொன்றில் சீரமைக்கப்பட்டுள்ள பாகங்கள் யாவை என்பதையும்;

(viii) அந்தக் கருத்திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

805/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1989 பெப்ரவரி 08 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்தவொரு தினத்தில் பௌத்த சமயத்தவர்களின் அதியுயர் பீடமாகிய புனிதப் தந்தம் வைக்கப்பட்டுள்ள ஸ்ரீ தலதா மாளிகையின் பாதுகாவலர்கள் மீது தாக்குதல் நடாத்தப்பட்டது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அச்சந்தர்ப்பத்தில் பறித்தெடுக்கப்பட்ட ஆயுதங்கள், இடம்பெற்ற உடல் மற்றும் ஏனைய பௌதீக சேதங்கள் ஆகியன வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி தாக்குதலுடன் தொடர்புடைய மக்கள் விடுதலை முன்னணியுடன் அல்லது அதன் ஆயுதக் குழுவாகிய தேசப்பற்றுடைய மக்கள் இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் என பொலிஸ் விசாரணைகளின் அடிப்படையில் கண்டறியப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி தாக்குதலுடன் தொடர்புடைய நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனரா என்பதையும்;

(v) அவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள சட்டரீதியான நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி தாக்குதலின் நோக்கமானது, புனிதத் தந்தத்தை கடத்திச் செல்லுதல் அல்லது அழித்தல் சார்ந்ததாக இருந்ததென விசாரணைகள் ஊடாக கண்டறியப்பட்டுள்ளதா என்பதையும்;

(vii) மேற்படி சம்பவம் தொடர்பிலான பொலிஸ் அறிக்கைகள் மற்றும் விசாரணை அறிக்கைகளை சமர்ப்பிக்க முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

857/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு.— (1)

(அ) (i) 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் கம்பனியால் ஏற்றுமதி செய்யப்பட்ட ரொக் பொஸ்பேட்டின் அளவு ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) எப்பாவல ரொக் பொஸ்பேட்டை பெறுமதி சேர்க்காது ஏற்றுமதி செய்யக்கூடாதென வழங்கப்பட்டுள்ள புலங்குலம வழக்குத் தீர்ப்பு மற்றும் 2012.11.02 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு முரணாக அவை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iii) பொஸ்பேட் ஏற்றுமதி செய்வதற்கான கொள்வனவாளர்களை/கம்பனிகளைத் தெரிவு செய்கையில் முறையான பெறுகைச் செயன்முறை பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) முறையான பெறுகைச் செயன்முறையின்றி தெரிவுசெய்யப்பட்ட கம்பனிகள் யாவை என்பதையும்;

(vi) வழங்கப்பட்டுள்ள வரையறைகளை மீறி மேற்படி கம்பனிகள் ரொக் பொஸ்பேட்டை ஏற்றுமதி செய்துள்ளனவா என்பதையும்;

(vii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு கம்பனியும் வரையறைகளை மீறி ஏற்றுமதி செய்துள்ள ரொக் பொஸ்பேட்டின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(viii) 28% ஆன சதவீத வரையறையை மீறி 38% ஆன சதவீதத்தில் ரொக் பொஸ்பேட் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ix) ஆமெனில், அதன் காரணமாக ஏற்பட்டுள்ள நட்டம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

866/2025

கௌரவ லால் பிரேமநாத்,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள சுற்றுலா வலயங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மாத்தறை மாவட்டத்திலுள்ள சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iii) அவற்றுள் வர்த்தமானப் பத்திரிகையொன்றின் மூலம் சுற்றுலாத் தளமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iv) கொடபொல மற்றும் பிட்டபத்தறை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையிலான ஏராளமான இடங்கள் காணப்படுகின்றமையை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி இரு பிரதேச செயலகப் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் சுற்றுலா வலயமொன்று பெயரிடப்படுமா என்பதையும்;

(vi) அதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

869/2025

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு நிறுவப்பட்டபோது, தென் மாகாணத்தில் அந்த ஆணைக்குழுவிற்கு சாட்டுதல் செய்யப்பட்ட காணிகளின் அளவு, ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிற்கும் ஏற்ப வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) அந்தக் காணிகளுள், தற்போது தனியார் உரிமைக்கு கையளிப்பட்டுள்ள 50 ஏக்கருக்கும் குறைவான காணிகளின் எண்ணிக்கை, அத்தகைய ஒவ்வொரு காணியினதும் விஸ்தீரணம், காணி சாட்டப்பட்டுள்ள நபரின் பெயர் மற்றும் காணி சாட்டப்பட்டிருப்பது விவசாய நடவடிக்கைகளுக்காகவா இன்றேல் வணிக நடவடிக்கைகளுக்காகவா எனும் விபரங்கள் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிற்கும் ஏற்ப வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) இதுவரை சாட்டப்படாத அல்லது கையுதிர்க்கப்படாத காணிகளின் பெயர்கள் மற்றும் அவற்றின் விஸ்தீரணம் பற்றிய விபரங்கள் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிற்கும் ஏற்ப வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) அந்தக் காணிகளுள் தற்போது சட்ட நடவடிக்கைகளுக்கு உட்பட்டுள்ள காணிகள் யாவை என்பதையும்;

(v) புதிய கருத்திட்டங்களுக்காக கோரப்பட்டுள்ள காணிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

874/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2017.01.01 திகதி தொடக்கம் 2025.03.31 திகதி வரையான காலப்பகுதியில், மட்டக்களப்பு மாவட்டத்தின், மண்முனை வடக்கு பிரதேசச் செயலாளர் பிரிவில், 'அளிப்புப் பத்திரங்கள்' அல்லது 'காணி உரிமப் பத்திரங்கள்' வழங்கப்பட்ட அரச காணிகளில் மக்கள் வசிக்கின்றார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அம்மக்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் என்பன யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

956/2025

கௌரவ அஜித் கிஹான்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில், கடற்கரை கடலரிப்புக்கு உள்ளாகி வருவதன் விளைவாக காணிகள் மற்றும் சொத்துக்களுடன் சேர்ந்து மதச் சிலைகள் கூட கடலுக்கு இரையாகி வருகின்றன என்பதையும்;

(ii) கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களம் இடையீடு செய்து மேற்படி கடல் அரிப்பைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும், கடந்த அரசாங்கங்களினால் போதுமானளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) புத்தளம் மாவட்டத்தில், கரையோரம் அரிப்புக்குள்ளாவதைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(இ) இன்றேல், ஏன்?

997/2025

கௌரவ நிஷாந்த பெரேரா,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்தில் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்காக காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவால் ஆட்களுக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், இன்றளவில் அக்காணிகளில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கமைய வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி காணிகள் வழங்கப்பட்ட வழிமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2025 ஜூலை 24, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

615/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹரகம அபேக்ஷா மருத்துவமனையில் இன்றளவில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அம்மருத்துமனையின் நன்கொடை கணக்கிற்கு கிடைத்திருந்த நிதி எவ்வளவென்பதையும்;

(iii) 2020 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை அக்கணக்கிலிருந்து பயன்படுத்தப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படாத நிதி தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) மஹரகம அபேக்ஷா மருத்துவமனைக்கு நன்கொடையாக கிடைக்கும் நிதியை பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

638/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை, இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் மீனவர்களிடமிருந்து கொள்வனவு செய்த மீன்களின் அளவு ஒவ்வொரு வருடத்திற்கமைவாக வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) அந்த மீன்களின் அளவானது, இலங்கையின் மொத்த மீன் அறுவடையின் சதவீதமாக ஒவ்வொரு வருடத்திற்கமைவாக வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) மீன்களை கொள்வனவு செய்வதற்கும், மீன்களின் விலையை நிலையான மட்டத்தில் பேணுவதற்கும் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் இடையீடு எவ்வகையிலும் போதுமானதாக இல்லையென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) அவ்வாறெனில், அந்த நிலைமையை சரிசெய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

652/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்கிசை பிரதேசத்தில் செயற்கை கடற்கரையை அமைக்கும் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்கு இன்றளவில் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டம் இன்றளவில் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்தின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

717/2025

கௌரவ தனுஷ்க ரங்கனாத்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இயற்கை நீரோடைகளைப் பாதுகாக்கும் பொருட்டு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இயற்கை நீரோடைகளை அண்டியதாக இருக்க வேண்டிய நீரோடை ஒதுக்கத்திற்குரிய நிலப்பிரதேசத்தின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) நீரோடை ஒதுக்கங்களை பலாத்காரமாக கையகப்படுத்தியுள்ள நபர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நீரோடை ஒதுக்கங்கள் அறுதி உறுதிக் காணிகளாக வழங்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறு களுத்துறை மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ள நீரோடை ஒதுக்கக் காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி நீரோடை ஒதுக்கக் காணிகளை மீண்டும் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

721/2025

கௌரவ டபிள்யூ.எச்.எம். தர்மசேன,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கும்புக்கன் ஓயா திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) அந்தத் திட்டத்தின் கீழ் கடந்த நல்லாட்சி அரசாங்கம் நக்கல அணைக்கட்டை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்திருந்ததை அறிவாரா என்பதையும்;

(iii) அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை யாது என்பதையும்;

(iv) அந்த அணைக்கட்டினை அபிவிருத்தி செய்வதன் மூலம் பயனடையும் விவசாய குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) மேற்படி அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக நீர்த்தேக்கத்தில் மூழ்கும் காணிகளின் உரிமையாளர்களுக்கு மாற்றுக் காணிகளை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) அந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் தற்போது ஸ்தம்பிதமடைந்துள்ளதை அறிவாரா என்பதையும்;

(vii) அவ்வாறாயின், அந்த அபிவிருத்தி நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

807/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப் பட்டுள்ள பணிப்பொறுப்புகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களத்தில் இன்றளவில் காணப்படுகின்ற பணியாளர் வெற்றிடங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கைகள் உரிய நேரத்தில் கிடைக்காததால் அநேகமான வழக்குகள் தாமதமாவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கைகளை உரிய நேரத்தில் வழங்க எடுக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

954/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தால் அபிவிருத்தி அலுவலர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டபோது வெளிநாட்டுப் பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்ட அபிவிருத்தி அலுவலர் நியமனங்கள் பின்னர் இரத்து செய்யப்பட்டது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அதில் தாக்கம் செலுத்திய திட்டவட்டமான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) அதன்போது பாதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் தீர்வு யாது என்பதையும்;

(iv) வெளிநாட்டுப் பல்கலைக்கழகப் பட்டதாரிகள் எதிர்காலத்தில் தகைமைகளின் அடிப்படையில் எதுவிதமான அநீதி அல்லது பாகுபாடின்றி அரசாங்கச் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவார்களா என்பதையும்;

(v) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(vi) 2020 ஆம் ஆண்டில் அபிவிருத்தி அலுவலர் நியமனங்கள் வழங்கப்படும் போது 45 வயதெல்லையைப் பூர்த்தி செய்யாத, இருப்பினும் தற்போது அவ்வயதெல்லையைக் கடந்துள்ள நபர்கள் உள்ளிட்ட அபிவிருத்தி அலுவலர் நியமனங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ள நபர்களுக்கு வழங்கப்படும் தீர்வு யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

975/2025

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தின், உகன மற்றும் பொத்துவில் பிரதேசங்களுக்கு தனித்தனி கல்வி வலயங்களை நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதோடு அதற்கு கிழக்கு மாகாண ஆளுநரும் தமது விதப்புரைகளை வழங்கியிருந்தார் என்பதையும்;

(ii) ஆனாலும், கல்வி அமைச்சு அதற்கு அங்கீகாரம் வழங்கவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், உகன மற்றும் பொத்துவில் பிரதேசங்களுக்கு தனித்தனி கல்வி வலயங்களை நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) அதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

994/2025

கௌரவ சுனில் ரத்னசிரி,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை, மாத்தளை மற்றும் அனுராதபுரம் உள்ளிட்ட பல நகரங்களில் பெற்றோலியத்தைக் களஞ்சியப்படுத்தும் தாங்கிகள் உள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) இலங்கையிலுள்ள மொத்த தாங்கிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி தாங்கிகள் எந்தெந்த அமைச்சுகளுக்கு சொந்தமானவை என்பதையும்;

(iv) மேற்படி தாங்கிகளின் சாதாரண கொள்ளளவுத்திறன் எவ்வளவு என்பதையும்;

(v) தற்போது இந்த தாங்கிகளைப் பயன்படுத்துவதற்கான ஏதேனும் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

995/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பயிர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதையும்;

(ii) அதற்கென விவசாயிகள் மிக அதிகமான உழைப்பினையும், பணத்தையும் ஈடுபடுத்த வேண்டியுள்ளது என்பதையும்;

(iii) ஆயினும், உழைப்பினையும், செலவினையும் ஈடுசெய்யக்கூடிய நியாயமான விலை விவசாய உற்பத்திகளுக்கு கிடைக்காமையின் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(iv) விவசாய உற்பத்திகளை கொள்வனவு செய்யும் போது, நுகர்வோரும் அதிக விலையை செலுத்த வேண்டியேற்பட்டுள்ளது என்பதையும்;

(v) விவசாயிக்கும் நுகர்வோருக்கும் இடைநடுவே உள்ள மொத்த வியாபாரியும், சில்லறை வியாபாரியும் அதிக இலாபத்தை ஈட்டுகின்றனர் என்பதையும்;

(vi) விவசாயிகள் மற்றும் நுகர்வோர் ஆகிய இருதரப்பினரையும் பாதிக்கின்ற மேற்படி வழிமுறையை மாற்றியமைக்க வேண்டும் என்பதையும்;

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) ஆமெனில், விவசாயி, வியாபாரி மற்றும் நுகர்வோர் ஆகிய மூவரையும் பாதுகாக்கும் வகையிலான வேலைத்திட்டமொன்று இதற்கென தயார் செய்யப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2025 ஜூலை 25, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

15/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை இலங்கையின் மொத்த தேயிலை உற்பத்திக்கு வழங்கியுள்ள பங்களிப்பு, சதவீத அடிப்படையில் ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) தற்போதுள்ள சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் மொத்த எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் தொடர்பில் செயற்படுகின்ற அரசாங்க நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்காக மேற்குறிப்பிட்டுள்ள நிறுவனம் ஒவ்வொன்றும் மேற்கொள்ளும் பணிப்பொறுப்புக்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

115/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட பல்வேறு ஆணைக்குழுக்கள் சார்ந்ததாக தமக்கு வழங்கப்பட்ட கடமைகளையும் பொறுப்புக்களையும் உரிய முறையில் நிறைவேற்றத் தவறியமைக்காக குற்றம் சுமத்தப்பட்டுள்ள அலுவலர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அந்த அலுவலர்களின் பெயர்கள் மற்றும் அவர்கள் தற்போது வகிக்கும் பதவிகள் யாவை என்பதையும்;

(iii) அந்த அலுவலர்களில், தற்போதைய அரசாங்கத்தின் கீழ் இன்றளவிலும் பொறுப்புக்களை வகிக்கின்ற அலுவலர்கள் இருப்பார்களாயின், அந்த அலுவலர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

163/2024

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 ஆம் ஆண்டில், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி பரீட்சை நடத்தப்படுவதற்கு முன்னர், அதனுடன் தொடர்புடைய வினாத் தாள்கள் அல்லது அவற்றில் உள்ளடக்கப்பட்ட வினாக்கள் வெளித்தரப்பினருக்கு கிடைத்துள்ளனவா என்பதையும்;

(iii) அவ்விடயம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

(iv) அந்தப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீடு இடைநிறுத்தப்பட்டிருந்ததா என்பதையும்;

(v) அவ்வாறாயின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(vi) அதனால், பாதிக்கப்பட்ட மாணவர்கள் குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

184/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின், மண்முனை தென்மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அம்பிளாந்துறை தொடக்கம் கொக்கட்டிச்சோலை வரையிலான வீதி புனரமைக்கப்படவில்லை என்பதையும்;

(ii) இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புகளைத் தெளிவூட்டிய போதிலும், இதுவரை மேற்படி வீதியைப் புனரமைப்பது தொடர்பான எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதையும்;

(iii) பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள் உள்ளிட்ட இப்பகுதியிலுள்ள பெருமளவான மக்கள் தமது போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக மேற்படி வீதியைப் பயன்படுத்துகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், அம்பிளாந்துறை தொடக்கம் கொக்கட்டிச்சோலை வரையிலான வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

199/2024

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் கடற்படுகைக்கு அருகாமையில் எரிவாயுக்கள் மற்றும் எண்ணெய் படிமங்களை ஆய்வு செய்வதற்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள கம்பனிகளின் பெயர்கள் யாவை;

(ii) மேற்படி அனுமதிப்பத்திரங்களை வழங்குகையில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் யாவை;

(iii) மேற்படி ஆய்வுகளின் தற்போதைய முன்னேற்றம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

217/2024

கௌரவ ரோஹண பண்டார,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை பங்குச் சந்தையில் முதலீடு செய்யப்பட்டுள்ள ஊழியர் சேமலாப நிதியத்தின் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அப்பணத் தொகை முதலீடு செய்யப்பட்டுள்ள கம்பனிகள் யாவையென்பதையும்;

(iii) அவ்வொவ்வொரு முதலீட்டின் மூலமும் பெற்ற இலாபம் / நட்டம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

225/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு புதியதோர் அரசியலமைப்பு தேவை என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) 'வளமான நாடு-அழகான வாழ்க்கை' கொள்கைப் பிரகடனத்தில் நிறைவேற்றதிகார சனாதிபதி முறையை இல்லாதொழித்து, விரைவில் புதியதோர் அரசியலமைப்பை முன்வைப்பதாக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறெனில், புதியதோர் அரசியலமைப்பு முன்வைக்கப்படும் காலப்பகுதி யாதென்பதையும்;

(iv) புதியதோர் அரசியலமைப்பினை வரைவுக்குட்படுத்தும் செயன்முறையானது, பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளும் தொடர்புபடுகின்ற, சர்வ கட்சி செயன்முறையாக இருக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) புதியதோர் அரசியலமைப்பினை முன்வைக்கும் செயன்முறைக்கு தேசிய ரீதியில் முன்னுரிமை வழங்காததற்கான காரணம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

508/2025

கௌரவ சாமர சம்பத் தசநாயக,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கான வாகன இறக்குமதி இடைநிறுத்தப்பட்டதன் பின்னர், அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட தீர்வையற்ற வாகன உரிமங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அத்தகைய உரிமங்களுக்கான வாகனங்களை இறக்குமதி செய்தல் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் யாது என்பதையும்;

(iii) அத்தகைய உரிமங்களின் கீழான வாகன இறக்குமதி இடைநிறுத்தப் பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், மேற்படி இடைநிறுத்தம் வலுவுடையதாக காணப்படும் காலப்பகுதி யாது என்பதையும்;

(v) அத்தகைய உரிமங்களின் கீழ் வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படுமாயின், அதற்காகப் பின்பற்றப்படும் வழிமுறை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

622/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையில் அறிக்கையிடப்பட்டுள்ள அனர்த்தங்களின் எண்ணிக்கை, அந்தச் சம்பவங்களால் அனர்த்தங்களுள்ளான ஆட்களின் எண்ணிக்கை மற்றும் குறித்த ஆட்களுக்கு வழங்கப்பட்ட நட்டஈட்டுத் தொகை ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை அனர்த்த முகாமைத்துவத்திற்கு செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) உலகில் பெரும்பாலான நாடுகள் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் விசேட கவனம் செலுத்துவதை அறிவாரா என்பதையும்;

(iv) அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் இலங்கை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1018/2025

கௌரவ பத்மசிரி பண்டார,— இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை, ஹிங்குரக்கொடயில் தேசிய கிரிக்கெட் மைதானமொன்று இருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) 2024 ஆம் ஆண்டில் அந்த மைதானத்தில் ஒரு விழா நடாத்தப்பட்டதுடன், அவ்விழாவின்போது அதிகளவான பணம் அவசியமற்ற வகையில் செலவு செய்யப்பட்டிருப்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அது தொடர்பிலான விசாரணையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பொலன்னறுவையில் ஒரு தேசிய மைதானம் இருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அந்த மைதானத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) நிர்மாணப் பணிகளில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக அந்த மைதானத்தின் பல பகுதிகள் உடைந்து வீழ்ந்துள்ளதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?